## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையின் கீழ், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விதந்துரைக்கப்படுவதற்கு ஆர்வம் உள்ள தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவையானது புதிய விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தொடர்பான கருமங்களில் அறிவு அல்லது செயல்முறை அனுபவம் உடைய ஆட்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள், இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் (www.parliament.lk) "விரைவான அணுகல்" (Quick Access) என்பதன் கீழ் *'இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்'* என்ற பெயரில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு;

**அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புச் சபை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

**2026 ஜூலை 31** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக *'இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்'* எனக் குறிப்பிடவும்.

2026.04.24 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள், இந்த விண்ணப்பக் கோரலின் கீழ் மீண்டும் விண்ணப்பிக்க விரும்பினால், அவர்களும் புதிய விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை – அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**

2026 ஜூலை 16